Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR

Case No.C.C.No. 233/2023

Deposition of witness for Prosecution P.W. 2 Date : 29.08.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | முத்துச்செல்வம் | Village : | குரும்பபாளையம் |
| Father's Name : | சக்கரைபாண்டி | Taluk : | அன்னூர் |
| Age : | 27 | District: | கோவை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of August 2025 **(Accused Present.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.**

நான் தற்போது குடும்பபாளையத்தில் குடியிருந்து ட்ரில்லிங் ஒர்க் செய்து வருகிறேன். சாலை விபத்தில் இறந்து போன கவிதா என் தாயார். சுமார் நான்கு வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் நான் வீட்டில் இருந்தபோது இரவு 9:30 மணி அளவில் என் தாயாருக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக எனக்கு தகவல் வந்தது. அதனால் நான் சம்பவ இடம் சென்றேன். சத்தி ரோட்டில் குரும்பபாளையம் பேருந்து நிறுத்தத்திற்கு அருகே விபத்து ஏற்பட்டிருந்தது. என் தாயாரும் அவரது தோழி காளியம்மாள் என்பவரும் சாலை கடக்க முயன்ற போது கார் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக சொன்னார்கள். என் தாயார் மீது மோதிய காரினை ஓட்டிய நபர் ஒரு பெண். அந்த காரின் ஓட்டுனர் இன்று நீதிமன்றத்தில் முன்னிலை ஆகியுள்ள எதிரி தான். (சாட்சி எதிரியை சுட்டிக்காட்டி அடையாளம் கூறுகிறார்). என் தாயாரை சிகிச்சைக்காக குமரன் மருத்துவமனையில் சேர்த்தோம். இரண்டு நாட்கள் சிகிச்சைக்கு என் தாயார் இறந்து விட்டார். அவரது உடலை கோவை அரசு மருத்துவமனையில் உடற்கூராய்வுக்கு பின்னர் அடையாளம் காட்டி பெற்றுக் கொண்டோம். இவ்வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ரோட்டில் எந்த புறத்தில் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு சரியாக தெரியவில்லை. விபத்து பற்றி எனக்கு கேள்விப்பட்டு தான் தெரியும் என்று சொன்னால் சரிதான்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.